www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண் | 1 | 1 | 2 | 1 | 1 | α.

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024 -25

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடிஎதுகை, சீர்மோனை ஆ) அடிமோனை, அடி எதுகை

இ) சீர்எதுகை, அடிமோனை ஈ) சீர்மோனை, சீர் எதுகை

2. அணி இலக்கணத்தை மட்டும் கூறும் நூல்

அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம் இ) வீரசோழியம் ஈ) முத்துவீரியம்

3. 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்' –விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார் ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

4. உலகப் புவிநாள்

அ) ஏப்ரல் 22 ஆ) மே 22 இ) ஜுன் 5 ஈ) டிசம்பர் 10

5. எளியது, அரியது என்பன

அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது

இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

6. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) நாய் ஆ) எருது இ) யாளி ஈ) குதிரை

7. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) கடுக்காய் ஆ) வசம்பு இ) மாவிலைக்கரி ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

8. "ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்" என்று கூறும் நூல்

அ) தமிழ்விடுதூது ஆ) சிந்தாமணி இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

9. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

| | |
|---|---|
| 1. காதை | (i) கந்தபுராணம் |
| 2. சருக்கம் | (ii) சீவகசிந்தாமணி |
| 3. இலம்பகம் | (iii) சூளாமணி |
| 4. படலம் | (iv) சிலப்பதிகாரம் |

அ) (1) - (iii) , (2) - (iv) , (3) - (ii) , (4) - (i) ஆ) (1) - (iv) , (2) - (iii) , (3) - (ii) , (4) - (i)

இ) (1) - (iv) , (2) - (iii) , (3) - (i) , (4) - (ii) ஈ) (1) - (iii) , (2) - (iv) , (3) - (i) , (4) - (ii)



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்...... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

(i) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்

(ii) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

அ) (1) தவறு ; (2) தவறு ஆ) (1) சரி ; (2) தவறு

இ) (1) சரி ; (2) சரி ஈ) (1) தவறு ; (2) சரி

11. 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்' –இத்தொடரில் இடம் பெற்றுள்ள பெயரெச்சம்

அ) வளர்ந்த ஆ) உண்டு இ) இடந்தனில் ஈ) பிறந்து

12. 21 நரம்புகளைக் கொண்டது

அ) மகரயாழ் ஆ) பேரியாழ் இ) சகோடயாழ் ஈ) செங்கோட்டியாழ்

13. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ) சமணமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும்

இ) கிறித்தவமும் தமிழும் ஈ) இசுலாமும் தமிழும்

14. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்

அ) கூனன் தோப்பு ஆ) துறைமுகம்

இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு குட்டித்தீவின் வரைபடம்

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3x2=6**

15. ஞாலத்தின் பெரியது எது?

16. வசனம், கவிதை – வேறுபாடு தருக.

17. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

18. "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" –யாருக்கு?

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **2x2=4**

19. கலிவிழா, ஒளிவிழா – விளக்கம் தருக.

20. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

21. முறை வைப்பு என்றால் என்ன?

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. **7x2=14**

22. தமிழில் பிழையின்றி எழுதுவற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

23. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதிக்கியது.

24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

25. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.

களம் – கலம்

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) செய்த ஆ) உயர்ந்தோர்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

27.இலக்கணக்குறிப்பு தருக. (ஏதேனும் ஒன்றுக்குமட்டும்)

அ) காய்நெய் ஆ) ஆடலும் பாடலும்

28.கலைச் சொல்லாக்கம் தருக.

அ) Stapler ஆ) Conviction

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

பின்வரும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்திடுக.

அச்சாணி இல்லாத தேர்போல

29.சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்

அ) தாமரை ஆ) பலகை

30.பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

31. “வருபவர் எவராயினும் நன்றி செலுத்து” – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32.சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33.நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

34.கடையெழு வள்ளல்களைவும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35.பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

36.சென்னை பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37.பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்கம் எழுதுக.

38.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

### பிரிவு–3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

39. அ) சொற்பொருள் பின்வருநிலை அணியை சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40.இலக்கியம் நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்கி எழுதுக

*பிறப்பினால் எவர்க்கும் –உலகில்*
*பெருமை வராதப்பா !*
*சிறப்பு வேண்டுமெனில் – நல்ல*
*செய்கை வேண்டுமப்பா !*
*நன்மை செய்பவரே – உலகம்*
*நாடும் மேற்குலத்தார் !*
*திண்மை செய்பவரே – அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார் !*

– *கவிமணி தேசிய விநாயகம்*

41. அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

42.பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

(அல்லது)

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

43. தமிழாக்கம் தருக.

1. A new language is a new life.
2. Knowledge of language is the doorway to wisdom.
3. The limits of my language are the limits of my world.
4. If you want people to understand you speak their language.

**செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா:**

**கீழ்க்காணும் பத்திகயைப் படித்துக் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

'வசன நடை கை வந்த வல்லாளர்' என பரிதிமாற் கலைஞரால் புகழ்ப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம், எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள், படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமைபெற்றவர். இவர் தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. இவரை செந்தமிழைப் பேணி வளர்த்த பெரும்புலவன் என கவிமணி பாராட்டியுள்ளார்.

**வினாக்கள்.**

அ) ஆறுமுக நாவலர் பிறந்த ஊர் எது?

ஆ) ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது எது?

இ) வசன நடை கைவந்த வல்லாளர் எனப் போற்றப்படுபவர் யார்? போற்றியவர் யார்?

ஈ) ஆறுமுக நாவலர் புலமை பெற்றிருந்த மொழிகள் எவை?

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3x6=18**

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (அல்லது)

ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் நிறுவுக.

45. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. (அல்லது)

ஆ) கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' –இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" –நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

## பகுதி – V

**அடிபிறழாமல் எழுதுக.** **4+2=6**

47. அ) 'குழல்வழி' எனத் தொடங்கும் சிலப்பதிகாரம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "மகற்கு" – என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com